2. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் முனைவர் க. நாகராஜன் அவர்கள் 28-3-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். முனைவர் க. நாகராஜன் அவர்கள் 1971-76 ஆம் ஆண்டுகளில் வட மதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. தகவல் கோரல்

சென்னை, வடபழனி பகுதியில் சுமதி என்பவர் படுகொலை

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னாலே சென்னை நகரத்திலே அனைவரையும் கலக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய வகையில் கோடம்பாக்கம் பகுதியிலே சுமதி என்பவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தது. அதற்குப்பிறகு, பலதரப்பட்ட செய்திகள் வந்திருக்கின்றன. இன்றையதினம் துப்பு துலக்குவதிலே முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எந்த அளவிற்கு அந்தக் கொலையில் அல்லது மரணத்தில் துப்புகள் துலக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவை உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2-4-2002 அன்று சென்னை வடபழனியிலுள்ள அழகர் பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்த சுமதி என்ற 28 வயது பெண்மணி கொலை செய்யப்பட்டு இறந்து போனது சம்பந்தமான விவரங்களை இந்த அவையில் நான் ஏற்கெனவே தெரிவித்து, இதுகுறித்து பல கோணங்களில் விசாரணை முடுக்கி விடப்பட்டு இருந்தது. சென்னை மாநகர காவல் துறையினரும் மற்றும் இதர மூத்த காவல் துறை அலுவலர்களும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, இந்த வழக்கின் குற்றவாளிகளை விரைந்து பிடிப்பதற்கு தியாகராய நகர் துணை